# சங்க இலக்கியங்களில் சைவ சமயம்

முனைவர் க .வாசுகி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்.

39

**ஆய்வுச் சுருக்கம்**

சமயம் என்பது இறை, உயிர், உலகம் பற்றிய ஒரு நம்பிக்கை முறையாகும். சைவ சமயம் சிவ நெறி என்றும் அழைக்கப்படுகின்றது. சிவம் என்ற சொல் பல நூற்றாண்டுகளாகத் திரிபுச் சொல்லாக மாறி, சைவம் என்று மாறியதாகக் கருதப்படுகின்றது. சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயமாகும். சங்க நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க கால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சைவ சமயக் குறிப்புகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கருவிச்சொற்கள்**

சைவம், சிவன் என்னும் சொல், சைவ சித்தாந்தம், சைவ சித்தாந்தத்தின் சிறப்பு, சங்க இலக்கியங்களில் சிவன்

**முன்னுரை**

தமிழ் மக்களின் தொன்மை வழிபாடுகளில் சிவ வழிபாடு மிகவும் பழமை வாய்ந்தது. உலகிலேயே மிகப் பழமை படைத்ததும் இன்றளவும் நின்று நிலவுவதும் சிவ வழிபாடு தான் என்ற உண்மையினை தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. லிங்க வடிவமான இறைவனை சிசின தேவர் என்று வேத நூல்கள் விளம்புகின்றன. மக்கள் பலரும் லிங்க வழிபாட்டினை மேற்கொண்டிருந்த உண்மையினையும் ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். கோயில்கள், லிங்கங்கள், பெயர்கள், பொற்காசுகளில் உள்ள சிவபிரானின் வடிவங்கள் இதனை உறுதி செய்கின்றன. மணிவாசகர்,

‘தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி’[1]

என்று இயம்புதல் ஏற்புடையதாகும். தொல்காப்பியத்தில் சிவன் பற்றி நேரடியாக சொல்லப்படவில்லை என்றாலும்,

‘கொடிநிலை கந்தழி வள்ளி என்னும்
வடு நீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே’ [2]

என்ற நூற்பாவில் இடம்பெற்றுள்ள கந்தழி என்பது நெருப்பையும், நெருப்பு வடிவாக உள்ள சிவனையும் குறிக்கும் என்பர். “சிவபிரான் முழுமுதலாகவும், கதிரவனாகவும், எண் மெய்யினனாகவும், முத்தொழில் புரியும் முக்கண்ணனாகவும், யோகியாகவும், மழு, சூலம், நாகம் உடையவராகவும்,

தாண்டவனாகவும், உமையொரு கூறனாகவும் விளங்கினர்" [3] என்று டாக்டர் கர்மார்க்கர் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார்.

**சைவம்**

சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமய நெறியாளர் சைவர் எனப்படுவர். பழந்தமிழர்களின் ஐந்நில தெய்வமான சேயோன் சிவனாக மாறியதையும், சேயோன் வழிபாடு சிவன் வழிபாடாக மாறியதையும் தமிழர் சமயம் நூலில் பாவாணர் குறிப்பிடுகின்றார். சிவனை வழிபடும் சிவனடியாகிய சைவம் தென்னாட்டில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே நிலவிய தொன்மைச் சமயமாகும். இதனை சைவம் என்ற பெயரால் கிபி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய மணிமேகலை ஆசிரியர் குறிப்பதால் அறியலாம். மணிமேகலையில் முதன் முதலில் இச்சொல் வழக்கு காணப்படுகின்றது

'இறைவன் ஈசன் என
நின்ற சைவவாதி நேர்படுதலும்'[4]

என்பது அத்தொடர் ஆகும். சைவ சமயம் சிவனுடன் சம்பந்தம் உடையது என்கின்றது திருமந்திரம். இதனால், சிவன் என்ற சொல்லிலிருந்து வந்ததே சைவம். சிவனை முதன்மையாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயம் என்பதை அறியலாம்

**சிவன் என்னும் சொல்லின் பொருள் :**

சிவன் என்னும் சொல் தமிழில் சிவந்தவன் செம்மையானவன் எனப் பொருள் தரும். சிவபிரான் தமிழர் தெய்வம் என்று கருதிய கருமார்க்கர், சிவ, சிவப்பு என்னும் தமிழ் வேர்ச்சொல்லின் அடியாக தோன்றிய சொல்தான் சிவன் என்று எழுதியுள்ளார். இவர் கருத்தினை,

'சிவன் என்னும் நாமம் தனக்கே
உடைய செம்மேனி எம்மான்' [5]

என்னும் அப்பர் அருள் மொழியும், 'செக்கர் போலும் திருமேனி' என்னும் மணிவாசகர் வாய்மொழியும் உறுதிப்படுத்துகின்றன. மங்களம், நன்மை என்ற பொருள்களும் சிவன் என்ற சொல் உணர்த்துகின்றது. சம்பந்தர் 'நன்றுடையான்' என்று உரைத்தது இதற்குச் சான்றாகும்

**சைவ சித்தாந்தம்**

சைவ சித்தாந்தத்தின் தோற்றம் சிவ வழிபாடு. தொன்மை உடைய தெனினும் சைவ தத்துவங்கள் பிற்காலத்தில் தான் வடிவம் பெற்றது எனலாம். சைவ ஆகமங்களுள் காமிகும் முதல் மாதுளம் ஈறாக உள்ள 28 ஆகமங்கள் மிகவும் சிறப்புடையதாகும். உமையொரு பாகம் 28 ஆகமங்கள் அருளினன் என்றும் இவற்றுள் 9 சிறப்புடையவை என்றும் கருதினார்கள். இ இவ் உண்மையினை,

'அஞ்சன மேனி அறிவையோர் பாகத்தான்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்'
பெற்றநல் ஆகமம் காரணம்

உற்றநல் வீரம் உயர்சிந்தம் மாதுளம்' 6 63 திருமந்திரம்

என வரும் திருமந்திரம் புலப்படுத்துகின்றது. 'தமிழர்களின் தத்துவமாக தமிழ் மக்களின் நுண்ணறிவின் மிகப்பெரிய படைப்பு சைவ சித்தாந்தம்' என்று தம் திருவாசகம் மொழிபெயர்ப்பின் முன்னுரையில் புகழ்ந்து போற்றுகின்றார் ஜி.யு.போப். 'மிகவும் குறிப்பிடத்தக்க சைவ சமயத்தின் ஆக்கம் தென்னாட்டுத் தமிழர்களிடம் காணப்படுகிறது' என்று எஸ்டிலின் கார்பெண்டர் குறிப்பிடுகின்றார்.

பெர்னெட் என்னும் பேரறிஞர் 'இயல்பில் ஊறிய கற்பனை ஒலியுடனும் உணர்ச்சிப் பெருக்குடனும், வெளிப்பாட்டு அளவுடனும், அழகுடனும் கூடிய பக்தி இலக்கியச் செல்வத்தினை உலகில் தமிழர்தம் சைவத்தினைத் தவிர எச்சமயமும் எய்தவில்லை' என்று பாராட்டுகின்றார் .

**சைவ சமயத்தின் தனிச்சிறப்பு :**

சைவ நெறி எல்லோருக்கும் பொதுவானது. அன்பை உயிர் நாடியாகக் கொண்ட நெறியே சிவநெறி. பிற நெறிகளைப் படிநிலைகளாகக் கொண்ட சமரச நோக்கு உடையது. சாதி பேதமின்றி சமத்துவம் வாய்ந்தது. அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை இறைவனாக ஏற்றி அருள் பெற்று விட்ட திறனை சைவத்தின் மேன்மைக்குச் சான்றாகக் கூறலாம்

**சங்க இலக்கியங்களில் சிவபிரான்**

சங்கத் தமிழ் இலக்கியங்கள் காதல், வீரம், மக்கள் வாழ்வியல் நெறிமுறைகள், தொழில், வணிகம், கலை முதலியவற்றை எடுத்துரைக்கின்றன என்றாலும் அவற்றினூடே இறைவன் பற்றியும், இறை இயல்புகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. பண்டைத் தமிழர்கள் இறைவனிடத்தில் அன்பும் அச்சமும் கொண்டு வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு, சங்கப் பாடல்கள் பெரிதும் சான்றாக விளக்குகின்றன.

'பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியை சேர்ந்தேன்'[7]

என்ற காரைக்கால் அம்மையார் பாடல் வழியாக அக்கால மக்களின் வாழ்வியல் அமைந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. சங்கப் பாக்களில் மிகவும் தொன்மை உடையதாகக் கருதப் பெரும் காரிக்கிழாரின் பாடலில்,

'பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே'[8] -புறம் ஆறு

என வரும் பகுதியில் சிவபெருமானின் கோயில் திகழ்த்த சிறப்பும், பெருமானை வலமாக வந்து வணங்குவதற்காகப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் குடை தாழ்க என்று புலவர் பணித்த பாங்கும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வள்ளல் ஆய் அன்டிரன் சிறந்த சிவபக்தன். இவன் அரிதாகப் பெற்ற கலிங்க ஆடையினை ஆலமர் செல்வனுக்கு வழங்கிய பக்திச் சிறப்பினை சிறுபாணாற்றுப்படை சுட்டுகின்றது.96 91 அரிதாகப் பெற்ற நெல்லிக்கனியை அவ்வையாருக்கு வழங்கி அருள் செய்த அதியமானை, முப்புறம் எரித்த சிவபிரானின் முக்கண்ணினையும் போல் முத்தமிழ் வேந்தரும் விளங்கினர் என்று வாழ்த்தினர்.

சிவனின் ஞானக் கண்ணாகிய நெற்றிக்கண் போல் அறிவை வளர்க்கும் பாண்டியன், சேர சோழ அரசர்களிலும் மேம்பாட்டுத் திகழ்த்தான் என மதுரை மருதனிளநாகனார் போற்றுகின்றார். இதனை,

கறை மிடற்றண்ணல் காமர்சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண்போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற'[9] - புறநானூறு 55

அகநானூற்றில் முக்கட்செல்வனின் ஆலமரம் குறிக்கப்படுகின்றது. கலித்தொகையில் இறைவனின் பாடல்கள் இடம்பெறுகின்றது. பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலிய சங்க நூல்களில் காணப்பெறும் சிவ வழிபாடு பற்றிய குறிப்புகள் யாவும் சங்க காலத் தமிழர்கள் சிறந்த சிவநேயச் செல்வர்கள் என்னும் வாய்மையினை வெளிப்படுத்துகின்றது.

'ஆதிரை முதல்வன்' என பரிபாடலும் 'மழுவோன்' 'நெடியோன்' 'தலைவனாக' என மதுரைக்காஞ்சியும் 'நீர் சடை கரந்தான்' எனக் கலித்தொகையும் சிவ வழிபாட்டைக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியங்கள் பலவும் திருவாசகம் குறிப்பிடும் முன்னைப் பழம்பொருட்கும் பழம்பொருளான சிவபெருமானையே முதன்மைப்படுத்தி அவருடைய மாண்புகளை எடுத்துரைக்கின்றன. சைவத் திருமுறைகளில் ஒன்றான தமிழ் வேதமாக கருதப்படும் திருமந்திரம் குறிப்பிடுகின்ற முறைமையில் சமய நெறிமுறைகளும் சமய வழிபாட்டு முறைகளும் இன்றளவும் கடைப்பிடிக்கப் பெறுகின்றன. நற்றிணை கடவுள் வாழ்த்து பாடலில்,

'மாநிலம் சேவடியாக தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கையாக
இயன்ற எல்லாம் பயின்ற அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீது அற விளங்கிய திகிரியோனே''[10] -

என்று சிவனுக்குரிய அடையாளங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஐங்குறுநூற்றில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்து பாடலும்,

'நீல மேனிவாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகைஉலகு முகிழ்த்தன முறையே '[11]

என உமா தேவியை ஒரு பாகம் உடையவன் என்றும் மூவகை உலகத்தோற்றத்திற்குக் காரணமானவன் என்றும் குறிப்பிடுகின்றது. புறநானூற்று கடவுள் வாழ்த்து பாடலும் சிவனின் அடையாளங்களைக் குறிப்பிடுகின்றது.

மணிமிடற்று மான்மலர் கொன்ற யவன் எதிரிகள்
எரிதழல் ஏந்திய பிறைசூடியவன்'[12]

என்று சிவனைப் பற்றி கலித்தொகை குறிப்பிடுகின்றது.

நீரும் நிலமும் தீரும் வலியும்

ஆகா வலி விசும் போடைந்தும்
நேற்றைய மழுவான நெடியோன் தலைவனாக ‘ [13] -

என சிவபெருமான் யாவற்றையும் படைத்தவனாகவும் ஏனைய தேவருக்குத் தலைவனாகவும், முதல்வனாகவும் விளங்குகிறார் என்பதை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. சிவபெருமானுக்கு மார்கழி திருவாதிரை நாள் சிறப்புடையதாகக் கருதப்பட்டு, அத்திருநாளில் சிவபெருமானுக்கு விழாக்கள் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது என்பதை எட்டுத்தொகை நூல்களில் பரிபாடல் குறிப்பிடுகின்றது.

திருமுருகாற்றுப்படை முதல் பாடல் சைவ சமய வழிபாட்டின் தொன்மையை எடுத்துக்காட்டும் பாடலாக அமைந்துள்ளது. கடலில் தோன்றிய விடத்தை உண்ட குறிப்பு சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஒருவன் என்ற பெயரில் குறிப்பாக சுட்டப்படுள்ள சிவபெருமான் கங்கையைத் தலைமுடியில் தாங்கியவன் என்பதை, ‘தேருநீர் சடை கரந்து’ என்ற கலித்தொகை பாடல் குறிப்பிடுகின்றது. சிவனுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே உபதேசித்து சாமிநாதனாக விளங்கியவன் முருகன் என்பதை அருணகிரிநாதர் திருப்புகழில் கூறியுள்ளார்.

**முடிவுரை**

உலகில் உள்ள ஒவ்வொரு சமயமும் மனிதனை நல்வழிப்படுத்துவதற்காகவே தோன்றியுள்ளன. அன்பே சிவம் என்பதுவே சைவ சமயத்தின் தாரக மந்திரம் ஆகும். பண்டைத் தமிழர்களின் அறிவு சார்ந்த பரிணாம வளர்ச்சியே சைவ சித்தாந்தம் சித்தாந்தமாகும். உலகில் பல்வேறு சமயங்கள் காணப்படுகின்ற போதிலும், மிகவும் தொன்மையானதும் சிறப்பு வாய்ந்ததுமான சைவ சமயத்தின் சிந்தனைகள், கருத்துக்கள், கொள்கைகள் முதலியவற்றை சங்க நூல்கள் வெளிப்படுத்துகின்றன இதனால் சைவ சமயத்தின் தொன்மையையும் அதன் சிறப்பையும் நன்கு அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1.மாணிக்கவாசகர் - திருவாசகம் - மந்திரப் பாடல்
2.தொல்காப்பியம் – பொருளதிகாரம் –புறத்திணையியல்-85
3.கர்மார்க்கர் – The religions of india – vol-1 p.49
4.மணிமேகலை – ப.54-55
5.தேவாரம் திருநாவுக்கரசர் – 9
6.திருமந்திரம் – 57-63
7.காரைக்கால் அம்மையார் -பெரியபுராணம் 1769
8..புறநானூறு - 6
9..புறநானூறு - 55
10.நற்றிணை - கடவுள் வாழ்த்து

11.ஐங்குறுநூறு 12.
12. கலித்தொகை-38
13. மதுரைக்காஞ்சி-25

**துணைநூற் பட்டியல்**

இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம, சாரதா பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு-2005

கந்தசாமி சோ. ந - தமிழும் தத்துவமும். அண்ணாமலை பல்கலைக்கழகம் சென்னை முதற்பதிப்பு 1976

பன்னிரு திருமுறைகள் மாணிக்கனார் .அ, வர்த்தமானன் பதிப்பகம்,, பதிப்பகம், சென்னை

பாலசுப்பிரமணியம் கு .வெ - நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை , முதற்பதிப்பு-2004

பாலசுப்பிரமணியம் கு .வெ - ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை , முதற்பதிப்பு-2004

பாலசுப்பிரமணியம் கு .வெ - புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு-2004

பாலசுப்பிரமணியம் கு .வெ - மதுரைக்காஞ்சி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை , முதற்பதிப்பு-2004